RIGHT TO INFORMATION ACT-2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை,** தேனாம்பேட்டை, சென்னை–18.
தொலைபேசி 24357580

**வழக்கு எண்.25007/விசாரணை/ 2009,**

**விசாரணை நாள் = 29–1–2010 (இராமநாதபுரம்)**

| | | |
|---|---|---|
| முன்னிலை_ | = | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி,<br>எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | = | திரு ஏ.வி.ஏ. செந்தில்பாபு<br>த/பெ ஏ.வி. அண்ணாமலை<br>19/10, பேட்டை தெரு<br>மணச்சநல்லூர் அஞ்சல்<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 005 |
| பொது அதிகார அமைப்பு | = | பொதுத் தகவல் அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருச்சிராப்பள்ளி |

========

இன்று (29.1.2010) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு ஏ.வி.ஏ. செந்தில்பாலு, பொது அதிகார அமைப்பின் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பொதுத் தகவல் அலுவலரும் நேர்முக உதவியாளருமான (பொது) திரு கே. முத்து ஆகியோர் வந்திருந்தனர்.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் சட்டப் பிரிவு 6(1)ன் கீழ், மனுதாரர் 31.7.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி என்று முகவரியிட்டு, கீழ்க்காணும் மூன்று இனங்களுக்குத் தகவல் கோரி விண்ணப்பித்திருந்தார்

(1) அரசு கடித எண்.3342–டி/31–1 நாள் 9.1.1932ல் பழைய கண்டோன்மெண்ட் பகுதியில் உள்ள காலியிடங்களை புறம்போக்கு நிலங்களாக வகைப்பாடு மாற்றம் செய்ய அறிக்கை அனுப்பும்படி கோரியதற்கு, (திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர்

அலுவலக கோப்பு எண்.R. Dis. 6159/31 நாள் 31.3.1934) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வருவாய் வாரியம்/அரசுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையின் நகல்

(2) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ.அபிசேகபுரம் கிராமம் பழைய வார்டு ஒன்று (நகரளவு எண்.181, 182,184,185,186ல் கண்ட நிலங்கள் அமைந்துள்ள இடம் பழைய கண்டோன்மெண்ட் பகுதியாகும். 1927ம் வருட ரீசெட்டில்மெண்ட்படி தனியார் பெயரில் இந்த புல எண்களில் உள்ள நிலங்கள் பட்டா பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த புல எணிகளில் உள்ள நிலங்கள் தனிநபர்களுக்கு மிலிடெரி அதிகாரிகளால் விற்பனை செய்யப்பட்டதா ? அல்லது சிவில் அதிகாரிகளால் விற்பனை செய்யப்பட்டதா என்ற தகவலும் அதற்குரிய உத்திரவு நகல்

(3) கோ. அபிசேகபுரம் கிராம பழைய வார்டு ஒன்று, பிளாக் 30, தொடர்பான வரைபடத்திலிருந்து நகரளவு எண்.181. 182.184,185 மற்றும் 186ல் கண்ட காலி நிலங்கள் குறித்து அரசு கடித எண்.3342–டி/31–1 நாள் 9.1.1932ன்படி, அரசுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையின் நகல் மற்றும் அரசு பிறப்பித்த உத்திரவு நகல்

சட்டப் பிரிவு 7(1)ன் கீழ், 30 நாட்களுக்குள் தகவல் கிடைக்கப் பெறாததால், சட்டப் பிரிவு 19(1)ன் கீழ் 31.8.2009 அன்று முதல் மேல்முறையீடும், சட்டப் பிரிவு 19(3)ன் கீழ் 8.10.2009 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடும் செய்ததன் அடிப்படையில், சட்டப் பிரிவு 18(3)ன் கீழ் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3.இன்றைய விசாரணையின்போது, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய இனங்கள் மாநகராட்சி சம்பந்தப்பட்டிருப்பதால், அவரது மனுவினை 14.8.2009 மற்றும் 9.9.2009 ஆகிய நாட்களில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பி, மனுதாரர் கோரிய தகவல்களை அளிக்குமாறு கோரியுள்ளார். இதுகுறித்து மனுதாரருக்கும் பதில் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும் இன்றைய விசாரணையின்போது, மனுதாரர் கோரிய திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கோப்பு எண்.R.Dis.6159/31 நாள் 31.3.1934, 1930 ரீசெட்டில்மெண்ட் பதிவேடு ஆகியவற்றை ஆணையத்தின் முன் மனுதாரர் பார்வையிட்டார். மேலும் அக்கோப்பிலிருந்து நகல்கள் எடுக்க இயலாத நிலைமையினை மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது. மனுதாரரும் அதனை ஏற்றுக் கொண்டார். இந்நிலையில், தனக்கு

(1) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழைய கண்டோன்மென்ட் பகுதியில் உள்ள நஞ்சை (wet land) மற்றும் புறம்போக்கு நிலம் பற்றிய பட்டியல்,

(2) 1930 – 'அ' பதிவேடு நகல்,

(3) தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள வருவாய் பதிவேடு ஆவணம் – 'அ' பதிவேடு நகல்

ஆகியவற்றை தந்தால் போதுமானது என்று ஆணையத்தின் முன் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரும் மனுதாரர் கோரிய மூன்று இனங்களுக்கான நகல்களை அளிப்பதாகத் தெரிவித்தார்.

4. இந்நிலையில், மனுதாரருக்கு அவர் தற்போது பத்தி 3ல் கூறிய மூன்று இனங்களுக்குரிய ஆவணங்களின் நகல்களை சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப் பெற்ற இரண்டு வார காலத்திற்குள் மனுதாரருக்கு அனுப்பி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல்களின் நகலையும், இவ்வாணையத்திற்கு மூன்று வார காலத்திற்குள் அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

மாநில தகவல் ஆணையம்

ஒப்புதல் பெறப்பட்ட
நாள் 11 பிப்ரவரி, 2010.

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.25007/2009**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**
**திருச்சிராப்பள்ளி**

**வழக்கு எண். 25007/2009**
**பெறுநர்**
**திரு ஏ.வி.ஏ. செந்தில்பாபு**
**த/பெ ஏ.வி. அண்ணாமலை**
**19/10, பேட்டை தெரு**
**மணச்சநல்லூர் அஞ்சல்**
**திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 005**